இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபன
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்; ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 26 வியாழக்கிழமை (09 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 193

# சு.கவின் உத்தேச தீர்வு திட்டத்துக்கு பிக்குகள் முன்னணி கடும் எதிர்ப்பு!

## வடக்கு - கிழக்கை இணைப்பது தேசத்துரோகம் என சீற்றம்!!

கொழும்பு, ஜூன் 9

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகுத்துள்ள யோசனை ஒன்றில் -

வடக்கு - கிழக்கை இணைத்து ஒரு நிர்வாகப் பிரதேசமாக்குவது என்றும்; அம்பாறை மாவட்டத்தை ஊவா மாகாணத்துடன் இணைப்பது என்றும் தெரிவித்திருப்பது குறித்து—

தேசப் பிரேமி பிக்குகள் முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கை இணைப்பது தேசத்துரோகம் என்று தெரிவித்து பிரஸ்தாப முன்னணி கடும் சீற்றத்துடன் அறிக்கை வெளியிட்டுள்ளது.

பிக்குகள் தேசப் பிரேமி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

''இந்து'' பத்திரிகையில் அண்மையில் வெளியான செய்தி ஒன்றின்படி—

வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து ஒரு நிர்வாக அமைப்பாக்குவதற்கும்—

அம்பாறையை ஊவா மாகாணத்துடன் இணைப்பதற்கும் — வகை செய்யும் யோசனை ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எமது முன்னணி தனது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

இந்த யோசனைப் பிரகாரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால், அம்பாறை தவிர்ந்த கிழக்கில் வாழும் ஏராளமான சிங்கள மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

அது மட்டுமா? இலங்கையில் தனித் தமிழ் இராச்சியம் ஒன்றை அமைக்கவும் இது ஏதுவாகிவிடும்.

அதன் பின்னர், ஸ்ரீலங்காவுக்கு உரித்துடையவர்களான சிங்களவர்களின் தொகுதி கடலில் குதிக்க வேண்டிய நிலையையும் உருவாக்கிவிடும்.

வடக்கு - கிழக்கை இணைப்பது என்பது தேசத்துரோகமாகும். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்தக் கட்சிக்கும், உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கக் கூடாது என்று சகல பௌத்த

(6ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முனி



டி. பியா இருந்தா என்ன காமினியா இருந்தா என்ன தமிழருக்கு எல்லாம் ஒண்டு தான் பாருங்கோ.....!

### விமானம் வட்டமிட்டதால்

## கருத்தரங்கிற்கு வந்தவர்கள் பதற்றத்துடன் ஓடினர்!

சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போசாக்கு கருத்தரங்கிற்கு வந்த மாணவர்களும், பெற்றோரும் விமானம் இரைச்சலுடன் பலதடவைகள் வட்டமிட்டதால் பதற்றத்துடன் வீடுகளுக்கு ஓடத் தொடங்கினர்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வலிகாமம் மேற்கு கரையோரப் பகுதிகளை மையமாக வைத்து விமானம் சுற்றி வட்டமிட்டது.

விமானம் திரும்பிய பின் போசாக்கு கருத்தரங்கு மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களுடன் நடந்தது.

கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்கென தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சி குடிக்க ஆட்கள் இன்றி மிச்சமிருக்கக் காணப்பட்டது. (ஓ-12)

## கூரேயின் வீட்டுக்கு அருகே குழிக்குள் எலும்புக் கூடுகள்!

### பிக்குகளின் காவி உடைகளும் காணப்பட்டன

கொழும்பு, ஜூன் 9

ராஜகிரிய பகுதியில் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரேயின் வீட்டுக்கு அருகில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக தோண்டப்பட்ட குழி ஒன்றிலிருந்து ஏராளமான மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள், காவியுடைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவாம்.

சிங்கள வார இதழான ''லக்திவ'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த எலும்புக் கூடுகள் கடந்த காலங்களில் நிகழ்ந்த அசம்பாவிதங்களின் போது கொல்லப்பட்டவர்களுடையனவாக இருக்கலாம் என்றும் —

இந்த சிதைவுகளில் பெருமளவு காவியுடைகளும் காணப்படுவதால் எலும்புக் கூடுகள் புத்த பிக்குகளினுடையவையாக இருக்கலாம் என்றும் ''லக்திவ'' குறிப்பிட்டுள்ளது.

ராஜகிரிய ஆயுர்வேத வைத்திய சாலைக்கு அருகே அமைந்துள்ள — சேறும் சகதியுமான காணி பகுதியிலேயே — இந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு காரணங்களுக்காக பகலில் மட்டும்

## மாத்தறையில் பல்கலைக்கழக மாணவர் சத்தியாக்கிரகம்!

கொழும்பு, ஜூன் 9

ருஹுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் நேற்று முதல் தொடர் சத்தியாக்கிரகத்தை மாத்தறை பஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள சுற்றுவளையில் நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ருஹுணு பல்கலைக்கழக மாணவர்களின் வதிவிடப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு தவறியதைக் கண்டித்தும் அது தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்க்குமுகமாகவும் இச்சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலை 8மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு தடவையில் பத்துப்பேர் பங்குபற்றும் இச்சத்தியாக்கிரகம், கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் வரை தொடரும் என்று பல்கலைக்கழக மாணவர் பேரவையின் தலைவர் டபிள்யு. டீ. விமலசேகரா தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக சத்தியாக்கிரகம் பகல் வேளையில் மட்டுமே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுக்கும் வகையில் இன்று நடக்கும் சத்தியாக்கிரகத்தில் தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட உட்பட பல மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ-6)

### மேல் மாகாண சபையின்

## சுகாதார அமைச்சர் பதவியும் சந்திரிகாவுக்கு!

கொழும்பு, ஜூன் 9

மேல்மாகாண சபையின் சுகாதாரம் மற்றும் கடற்றொழில் அமைச்சையும் முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தற்காலிகமாக ஏற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே. முவைச் சேர்ந்த சுகாதாரம், கடற்றொழில் அமைச்சராக இருந்த பிரேமரத்தின குணசேகர பதவிநீக்கம் செய்யப்பட்டதை அடுத்து இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆரியரத்னா ஜயதிலக தொடர்ந்தும் தான் மாகாணசபை அவைத் தலைவர் பதவியை வகித்துவரப் போவதாக தெரிவித்திருக்கிறார். [ஒ-எ-6]

## றொனி, ஜயவிக்ரம இன்று பதவி ஏற்பு

கொழும்பு, ஜூன் 9

ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பிக்களாக நியமிக்கப்பட்டிருக்கும் றொனி டி மெல்லும், காமினி ஜயவிக்கிரம பெரேராவும் இன்று நாடாளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவிருக்கின்றனர்.

பதவி விலகிய தேசியப்பட்டியல் எம்.பிக்களான அலெக் றொபர்ட்ஸன், ஆர்.ஏ.டி. சிறிசேன ஆகியோரின் இடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-எ-6)

## அவ்ரோ நோட்டமிட்ட பின் குருநகர் பகுதிக்கு ஷெல்வீச்சு

### மூவர் காயமுற்றனர்; வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். கரையோரப் பகுதி மற்றும் நகரை அண்டிய பகுதிகளை நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பல தடவைகள் அவ்ரோ விமானம் வட்டமிட்டு சென்ற சில நிமிடங்களின் பின்னர்—

மண்டைதீவு முகாமில் இருந்து நண்பகல் 12 மணியளவில் குருநகர் கரையோரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இப்போது மூவர் காயமடைந்தனர்.

ஷெல் குண்டுகள் குருநகர் தண்ணீர் தாங்கி வீதிப் பகுதியிலும், சென். ஜேம்ஸ் வீதிப் பகுதியிலும், வேளாங்கண்ணி மாதா கோயில் பகுதியிலும் விழுந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன.

தண்ணீர் தாங்கி வீதிப் பகுதியில் விழுந்துவெடித்த ஷெல்லினால் வீட்டினுள் இருந்த அன்ரன் மேரியுஸ்டின் (வயது 25) அவரது மகன் அன்ரன் அசோக் (வயது 1) ஆகியோரும், சென். ஜேம்ஸ் வீதிப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் புஷ்பராசா அன்ரனி (வயது 16) என்பவரும் காயமடைந்தனர். வீடு ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விமானம் வட்டமிட்டதைத் தொடர்ந்து பீதியுடன் இருந்த அப்பகுதி மக்கள் ஷெல் தாக்குதலை அடுத்து வீடுவாசல்களை விட்டு வெளியேறிச் சென்று பின்னர் திரும்பினர். (ஓ-15)

### வீதித் திருத்த வேலைகளுக்கு

## றோலர்கள் எடுத்து வர பாதுகாப்புக் குழு அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளைத் திருத்தும் வேலைக்கு இரண்டு புதிய றோலர்களை எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் விதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக இரண்டு புதிய றோலர்கள் யாழ். மாவட்டத்துக்குக் கிடைத்ததாகவும்—

இவற்றை கப்பல் மூலம் எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-3)

### இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு:

# இனி வரும் பேச்சுவார்த்தைகளில் அரசு கவனமாக நடந்து கொள்ளும்

### நாடாளுமன்றில் விக்கிரமசிங்க நேற்றுத் தகவல்

கொழும்பு, ஜூன் 9

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணவேண்டும் என்பதில் அரசாங்கத்துக்கு அக்கறையுண்டு. அதற்காக சிறு கட்சிகளுடனும், பிரபாகரனுடனும் நாம் பேச்சு நடத்த வேண்டும். எதிர்காலத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது அரசாங்கம் கவனமாக நடந்து கொள்ளும்.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

விமானப்படை, கடற்படை மீதான கட்டளைச் சட்டங்கள் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடந்தது. அந்த விவாதத்துக்குப் பதில் அளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

மீண்டும் தாம் பதவிக்கு வருவார்கள் என எதிர்க்கட்சியினர் கனவு காண்கிறார்கள். அவ்வாறு அவர்கள் பதவிக்கு வந்தால் இந்த நாட்டின் திறந்த பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டு மீண்டும் இருண்ட யுகத்தை நோக்கியே நாம் செல்லவேண்டியிருக்கும்.

ஓய்வு பெற்ற விமானப்படையினரை மீண்டும் அரசு சேவையில் சேர்க்க உள்ளது. இதன் மூலம் அவர்களது பயிற்சியினை பெற்றுக்கொள்ளலாம் — என்றார்.

விமானப்படை, கடற்படை மீதான கட்டளைச் சட்டங்கள் நாடாளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (ஓ-5)

## பிரேமா குடும்பத்தினருடன் ஐ.ஜி.பி. நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 9

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து விவரங்களைத் தெரிவிப்பதற்காக பொலீஸ் மா அதிபர் பிராங் டி. சில்வாவும் குற்றப் புலனாய்வுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஷவும் பிரேமதாஸா குடும்பத்தினரை நேற்றுச் சந்திக்க இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்காவின் பணிப்பின் மீது இப்பொலீஸ் உயர்நிலைக் குழுவின் சந்திப்பு இடம்பெறவிருந்தது.

# இங்கு மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் யுத்த நாடுகளில் உள்ளதை ஒத்தவையே

### றெட்பானா தலைமையக அதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 9

உலகில் கடுமையான யுத்தம் நடைபெறும் நாடுகளாக இனங்காணப்பட்டுள்ள இடங்களில் வாழும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் போன்ற துன்பங்களையே வடக்கு - கிழக்கு மக்களும் அனுபவிக்கிறார்கள்.

றெட்பானா அமைப்பின் தலைமையக அதிகாரிகளில் ஒருவரான திரு. மார்கும் அக்ஸ்லான்ட் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி அமைப்பின் கம்போடிய - ஸ்ரீலங்கா நாடுகளுக்கான திட்ட இணைப்பாளரான திரு. மார்கும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நோர்வே நாட்டின் தொண்டர் நிறுவனமான றெட்பானாவின் செயல்திட்டங்களையும், குடாநாட்டில் உள்ள பல அகதி முகாம்களையும் பார்வையிட்டார், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல இடங்களையும் சென்று பார்த்தார்.

திரு மார்கும் அக்ஸ்லான்ட் தாம் இங்கு அவதானித்தவை குறித்து உதயனுக்கு பின்வருமாறு தெரிவித்தார்.

கம்போடியா, நிகரகுவா, குவாதமாலா, மொசாம்பிக், எதியோப்பியா உட்பட பதினைந்துக்கும் மேற்பட்ட நாடுகளில் எமது அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

யுத்தம் நடக்கும் அந்த நாடுகளில் மக்கள் உணவு மற்றும் மருத்துவ, சுகாதார வசதிகள் போதியளவில் இன்றி இன்னல்படுவது போன்ற நிலையே இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் காணப்படுகிறது. மக்கள் மிகுந்த கஷ்டங்களுடனும் உயிர்ப் பாதுகாப்பு இல்லை என்ற உணர்வுடனும் வாழ்கிறார்கள்.

எமது அமைப்பு இலங்கைக்கு வருடாந்தம் ஆறுகோடி ரூபாவை ஒதுக்கீடு செய்கிறது. இதில் அரைவாசிப் பணம் வடக்கு - கிழக்கில் செலவிடப்படுகிறது.

இந்த உதவியை எமது தலைமையகம் இப்போதைக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 9

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் கடற்புறா பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-6)

## டி.பியை கவிழ்த்து காமினியை ஜனாதிபதியாக்கத் திட்டம்!

### தொண்டாவுடன் சேர்ந்து 'றோ' சதி!!

கொழும்பு, ஜூன் 9

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை நீக்கிவிட்டு, அந்த இடத்துக்கு காமினி திஸநாயக்காவை நியமிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய உளவுப் பிரிவான 'றோ' இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானுடன் சேர்ந்து இம்முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது.

சிங்கள வார இதழான 'திவயின' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தேசியப் பட்டியல் மூலம் எம்.பியான காமினி தனது அடுத்த இலக்கான ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவது தொடர்பாக தொண்டமானுடன் பல தடவைகள் சந்தித்து இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் ஐ.

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கு லிகிதர் தேவை

விண்ணப்பிக்கும் முகவரி.
இல: 140,
பலாலி வீதி, திருநெல்வேலி.

(31326)



நல்லூர் பிரதேச சபை

## பதில் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்
## பதில் நூலகப் பரிசாரகர்
## பதவிகள் வெற்றிடம்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பம் எதிர்வரும் 20 - 06 - 1994 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பங்களைத் தாமாகவே தயார் செய்து அனுப்பலாம்.

(1) பதில் ஆயுள்வேத மருந்து உத்தியோகத்தர்

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
(3) வயது 18க்குக் குறையாமலும் 50க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(4) பதிவு இலக்கம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
(5) நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(6) சிறந்த ஆரோக்கியமும் நல்நடத்தையுமுடையவராக இருத்தல் வேண்டும்.

(11) பதில் நூலகப் பரிசாரகர்

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) ஆகக் குறைந்தது 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(3) வயது 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(4) நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
(5) நல்ல ஆரோக்கியமும் நல்நடத்தையுமுடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 20 - 06 - 1994 ஆம் திகதிக்கு முன்பு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ "விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

திருமதி கமலாதேவி சிவசிதம்பரம்.
விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச செயலகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
07 - 06 - 1994

(சி-8428)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**விஸ்வலிங்கம் வேலாயுதர் பிள்ளை**
(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா ஓவசியர்)

தோற்றம்: **10-12-1910** மறைவு: **11-05-1994**

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவின் போது எங்கள் துயரில் பங்குபற்றியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 10-06-94இல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்!
அன்புமனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாமகள்வேன்,
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(31328)


## இன்று

வண்ணார்பண்ணை இளைய தம்பி இந்து வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆங்கில தின விழா அதிபர் திரு மு. செல்லையா தலைமையில் நடைபெறும்; பிரதம விருந்தினராக ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. கிருஷ்ணநாயகம் கலந்து சொள்கிறார்.

★ ★ ★

சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார கவனிப்புத் தொண்டர் அமைப்பு, பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வெளி நோயாளர் சிகிச்சை நிலையம் ஒன்றை இன்று வியாழக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு திறந்து வைக்கவுள்ளது. (ஓ-28)

★ ★ ★

சுழிபுரம், ஜூன் 9
சுழிபுரம் பொது நூலக வாசகர் வட்டத்தினரின் மாதாந்த அறிவியல் அரங்கு நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை 4.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

"போராட்ட சூழ்நிலையில் முதலுதவியின் அவசியமும் நோய்த் தடுப்பு முறைகளும்" என்னும் பொருளில் வைத்திய கலாநிதி ஸ்ரீராஜசேகரம் சிறப்புரையாற்றுவார். (ஓ-28)

# அனுரா ஆதரவாளருடன் சமரசம் காணும் முயற்சியில் சகோதரி சந்திரிகா

கொழும்பு, ஜூன் 9
மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள அனுரா பண்டாரநாயக்கா வின் விசுவாசிகளுடன் சமரசம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாண சு. க. எம்பியும் அனுராவின் அடுத்த விசுவாசியுமான மஹிந்த ராஜபக்ஸவுக்கு சந்திரிகா விருந்துபசாரம் ஒன்றை அளித்தார்.

அதில் சு. க. எம்பிக்களான மங்கள சமரவீராவும், எஸ். பி. திஸநாயக்காவும் கலந்து கொண்டனர்.

விருந்துபசாரத்தை அடுத்த பல மணி நேரம் பேச்சுவார்த்தையும் இடம் பெற்றது.

கட்சியில் சந்திரிகாவின் தலைமையை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## போசாக்கு குறைவால் வலிமேற்கில் பலர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9
வலிமேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் போசாக்கு வார அங்குராப்பண வைபவம் கடந்த 6ஆம் திகதி விக்ரோறியாக் கல்லூரியில் வலிமேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரிய மாணவர்கள் பயிற்சி நிலைய இயக்குனர்கள், பெற்றோர் ஆகியோர் போசாக்கு கலோக அட்டைகளுடன் ஊர்வலமாக வந்துமேற் படிவைபவத்தில் கலந்து கொண்டனர்.

வலிகாமம் மேற்கில் போசாக்குக் குறைபாட்டால் மிகப்பாதிப் படைந்த 8 ஆம் மட்டத்தினரான கர்ப்பிணிகள் 218 பேரும், பாலூட்டும் தாய்மார் 620 பேரும் ஒருவயதுக் குட்பட்ட சிசுக்கள் 42பேரும் முற்பாடசாலை மாணவர் 780 பேரும் பாடசாலை மாணவர் 3,000க்கு மேற்பட்டோரும் உள்ளனர் என்று பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தெரிவித்தார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் இலைக்கஞ்சி வழங்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் பொது ஜன விதாபனங்களும் கிராம சேவையாளரும் அன்பளிப்பாக வழங்கிய 22கிலோ ஜன் பாக்மாவைக் கெட்டுகள் மிகவும் போசாக்கு குறைந்த 3ஆம் மட்ட சிசுக்கள் 22 பேருக்கு வழங்கப்பட்டன அத்துடன் போஷாக்கு மிக நிறைந்த பயிற்றம் உருண்டைகளை செஞ்சிலுவைச் சங்கம், கருத்தரங்கில் கலந்து கொண்ட 65 முற் பாடசாலை மாணவருக்கு வழங்கியது.

சிறுவர் பாடசாலைகளுக்கு தண்ணீர் அள்ளி வைக்கக் குடங்களும், அறை சுத்தம் செய்யத்தும் புத்தடிகளும் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (க-17)

## முன்னோடி பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 9
தேசிய கல்வி நிறுவனத்தின் யாழ்/ இந்துக்கல்லூரி நிலையத்தைச் சேர்ந்த பட்டப்பின் "டிப்புளோமா" முதலாம் வருட மாணவருக்கான முன்னோடிப் பரீட்சை தொடர்ந்து 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. த. கிள்ளநாதன் அறிவிக்கின்றார். (இ)

## மற்றொரு எம். பியும் பதவி விலகுவார்

கொழும்பு, ஜூன் 9
ஐ. தே. க. தேசியப் பட்டியலில் உள்ள இன்னுமொரு எம். பியான சிரியானி டானியலும் பதவி விலக முன்வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## ஊழல் அமைச்சர்களின் பதவி பறிபோகாது

கொழும்பு, ஜூன் 9
ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள ஐந்து அமைச்சர்களை பதவி நீக்கம் செய்யும் திட்டத்தை ஜனாதிபதி விஜேதுங்கா கைவிட்டு விட்டார் என்று தெரிக்கப்படுகிறது.

இந்த அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்வது தேர்தலுக்கு முன்னர் எதிர் விளைவை ஏற்படுத்தும் என்று அறிவிக்கப்படுகிறது.

பதவி நீக்கத்திற்குப் பதிலாக அந்த அமைச்சர்கள் நிர்வகிக்கும் அமைச்சுகளை மாற்றுவது என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சந்திரிகாவின் முடிவுகளை ஏற்குமாறு சிறிமா பணிப்பு

சந்திரிகாவின் முடிவுகளை ஏற்று செயல்படுமாறு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களை சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

வைத்திய சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்வதற்கு முன்னர் மத்திய செயற்குழு உறுப்பினர்களை அவர் சந்தித்துப் பேசினார்.

அப்போது வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தபடி அவர் முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பின்னர் அவர்தனது நெருங்கிய உறவினரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தேணல் அனுருத் ரத்வத்தையுடன் தனிமையில் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது உடல் நிலை உடல் பற்றி கவலைப்படும் சிறிமா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகும் எண்ணத்தைத் அனுருத்தரத்வத்தை போன்ற நெருங்கியசகாக்களிடம் வெளியிட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. (இ-எ)

## பாடசாலைகளில்

யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் திரு. ஆ. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு: து. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு. தி இளந்திரையனும், ஸ்தாபகர் திரு. எஸ். கைலாயப்பிள்ளையும் கலந்து கொள்கின்றனர். (க—163)

## தமிழ்நாள் போட்டி பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ். மாவட்டத்தின் 13 கல்விக் கோட்டங்களிலும் உள்ள சகல பாடசாலைகளிலும் நடைபெற்ற தமிழ்நாள் போட்டியில் 72 நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவருக்கு, மாணவர் எழுச்சி நாளின் போது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியோடு பரிசுகள் வழங்கப்பட்டன.

இப் போட்டிகள் கோட்டம் தோறும் நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

அத்துடன் கடந்த ஆண்டில் யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு இறுதிப் பொதுத் தேர்வில் மாவட்ட அடிப்படையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற பத்து மாணவர்களுக்கும்—

18 கோட்டங்களிலும் முதல் பத்து இடங்களைப் பெற்ற 130 மாணவர்களுக்கும் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வின் போது பரிசுகள் வழங்கப்பட்டன.

1993 ஆம் ஆண்டு நடந்த 5 ஆண்டுப் பரீட்சையில் ம. வ. ட மட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு;

இ. சஜித்தா, தெல்லிப்பழை தந்தை செல்வா தொ. நி பாடசாலை (293 புள்ளிகள்),
போ. சிவகலா, வட இந்து மகளிர் கல்லூரி (291).
ச. சங்கீதா, இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை (290),
அ. மாதங்கி, மகாஜனக் கல்லூரி (289),
ம தக்ஷாயினி, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் (289),
பா. திரிசூலன், பெரியவிளான் றோ. க. த. பாடசாலை (288),
க. ஆஷியா, வட இந்து மகளிர் கல்லூரி (288),
இ. யூலியஸ் நிசாந்தன், சில்லாலை றோ. க. த. க. பாடசாலை (287)
ச. வினோதன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை (287),
சி பிரணவன், யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் (287). (இ-எ)

## ஆலயங்களில்

உரும்பிராய் ஓடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா 22 ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தத் திருவிழா 23 ஆம் திகதி வியாழக்கிழமையும் நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் திரு. த. சிவகுமாரன் 'விநாயகபுராணம்,' எனும் பொருள் பற்றி தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார் (க)

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜூன் 9
ஆனைக்கோட்டை கூழாவடி புற்றை தின்னிப் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்கார உற்சவ ஆரம்ப நாளான இன்று மூத்த சமய விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரசர்மா' "உருவேறத் திருவேறும்" என்னும் பொருளில் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். (அ)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கோலவுடை விநியோகம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் கடமையாற்றுபவர்களில் ஏறத்தாழ 600 பணியாளர்களுக்கு இவ்வாண்டுக்கான கோலவுடைகளைக் கொள்வனவு செய்து வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அவற்றினை வழங்கக்கூடிய நிறுவனங்கள் எதிர்வரும் 16-06-1994 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக மாநகரசபையில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
08-06-1994

(சி/8429)



## பற்சிகிச்சை நிலையம்

பிரதான வீதி,
ஆவரங்கால்.
Dr. பாலகிருஷ்ணன்
வைத்தியசாலை

சனி — ஞாயிறு
காலை 9மணி
தொடக்கம் பிற்பகல்
1மணி வரை

கெட்டைக்காடு
(அரசினர் வைத்திய
சாலைக்கு அருகில்)

சனி — ஞாயிறு
பிற்பகல் 2மணி
தொடக்கம்
பிற்பகல் 4மணி வரை

★ பல் பிடுங்குதல்
★ பல் அடைத்தல்
★ பல் கட்டுதல்
★ பல் சீரமைத்தல்
★ பல் துப்புரவாக்குதல்

**DR. R. சிறிரவீந்திரா**

[7438]



## பிரத்தியேக கணித வகுப்பு

துரித மீட்டற் பயிற்சி கணித வகுப்புகளிற்கு
**G C E (O/L)** மற்றும் ஆண்டு **5**
புலமைப்பரிசில் வகுப்புகள் மட்டும்

**ஆரம்பம்: 10 - 06 - 1994**
தொடர்பு:

**K.** காசிமாஸ்டர்
60/2 ஐந்துக்கல்லூரிஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

★ குறிப்பிட்ட அனுமதிகள் மட்டும்:

(சி/8267)



## திருமண விருந்துபசார அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (10-06-1994) வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.00 மணி முதல் 9.00 மணி வரையிலான

★ சுபமுகூர்த்த வேளையில் ★

எமது புதல்வன்
**சுதானந்தன்**
(சுதன்)
அவர்கட்கும்

எமது புதல்வி
**டிலோஜினி**
(டிலோ)
அவர்கட்கும்

கனடாவில் ஸ்காபுரோ மண்டபத்தில் திருமணம் நடைபெறும்.
அதையிட்டு 11-06-1994 சனிக்கிழமை மணமகள் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும்.

திரு. திருமதி பூதப்பிள்ளை தம்பதிகள்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
(தற்சமயம் கனடாவில்)

ம. சந்திரசேகரம் தம்பதிகள்,
(முன்னாள் தேசிய புடவை உற்பத்திக் கூட்டுத்தாபனம், [illegible], கொழும்பு)
அம்பலவாணர் வீதி,
[illegible] கிழக்கு,
சுன்னாகம்.

(7228)



## கண்ணீர் அஞ்சலி

**செல்வி ஜமுனா கனகசுந்தரம்**
(சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய 94 ஆம் ஆண்டு 2 ஆம் வருட வர்த்தகப் பிரிவு மாணவி)

அன்னையின் மடியில் 12 — 07 — 1973
ஆண்டவன் அடியில் 07 — 06 — 1994

கூடிக் குலவிப் பேசிவிட்டு — நீ
வாடி வதங்கிப் போனதும் ஏன்?
ஓடி ஆடி திரிந்தோம் ஒன்றாய் — இனி
தேடித் திரிய நீ இல்லை!
சென்றாய் இறை உலகு:

**எம் இதயக் கண்ணீர் அஞ்சலிகள்**

வர்த்தகப் பிரிவு மாணவர்கள்
மகளிர் மகா வித்தியாலயம்
சாவகச்சேரி

(இ-8430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கந்தர்மடம்
## செல்வநாகபூசணி அம்பாள் ஆலயம்
(யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
அம்பாளின் ஆனி பாத
## அலங்கார திருவிழா

இன்று (09–06–1994) வியாழக்கிழமை ஆரம்பமாகி 15 நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இறுதி 15ஆம் நாள் சங்காபிஷேக தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையும்.

தினமும் காலை 8-30 மணி — விஷேட பூசை
தினமும் மாலை 5-30 மணி — அபிஷேகம்
மாலை 6-30 மணி — பூசை
இரவு 7-00 மணி — வசந்த மண்டபப் பூசை
இரவு 7-30 மணி — அம்பாள் வீதிஉலா வருவாள்

அடியார்கள் தினமும் நடைபெறும் பூசைகளில் கலந்து அம்பாளின் அருளைபெற்றுய்யும்படி வேண்டுகின்றோம்.

— ஆலய தர்மகர்த்தா.

108, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [31320]

# பெனாஸிர்பூட்டோ அரசு இந்த ஆண்டுக்குள் கவிழும்
## சகோதரர் முர்தாஸா பூட்டோ கூறுகிறார்

இஸ்லாமபாத், ஜூன் 9
பெனாஸிர் பூட்டோவின் அரசு இவ்வாண்டுக்குள் கவிழ்ந்து விடும் என்று முர்தாஸா பூட்டோ கடந்த 6ஆம் திகதி அறிவித்தார்.

பிரதமரின் சகோதரரான முர்தாஸா பூட்டோ சில தினங்களுக்கு முன்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார் என்பது தெரிந்ததே.

விடுதலையான முர்தாஸா பாகிஸ்தான் அரசியலில் பிரவேசித்திருப்பது, பெனாஸிரின் அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முர்தாஸாவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு அவரது தாயார் நுஸ்ரத் பூட்டோ ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து தமது தாயாரான நுஸ்ரத்தை வெளியேற்றிவிட்டு தாமே தலைமைப் பதவியை பெனாஸிர் ஏற்றதைத் தொடர்ந்து அம்மா - மகள் உறவில் விரிசல் ஏற்பட்டது தெரிந்ததே. (இ-எ)

## ஜீவாகாரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9
வலிகாமம்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் இனம் காணப்பட்டு போஷாக்கு மிகக் குறைந்த 3 ஆம் மட்ட கர்ப்பிணிகள் 242 பேருக்கு மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் 12 ஆயிரத்து 100ரூபா பெறுமதியான ஜீவாகாரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். மேற்படி பிரதேச செயலாளர் பிரிவின் போஷாக்குநடவடிக்கைகளின் போது இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-17)

## புலிகளின் குரல் வானொலியில்

09 – 06 – 1994
வியாழன் இரவு
★ 8-01 — சொல்லுங் கேட்போம் பார்க்கலாம்
★ 8-10 — உரை – "வழக்கு மொழியும் இலக்கிய மொழியும்"
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் "வீதிகளும் அவசியம் எனத் தெரிவிக்கும் உட்கட்டுமானம்" சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — லெப்டினன் ட் கேணல் டேவிட் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி – 'கடலில் கலந்த காவிய நாயகன் டேவிட்''

10 – 06 – 1994
வெள்ளி காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கானங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## புகைப்படகலை கற்கைநெறி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் தொழில்சார் புகைப்படக்கலை எனும்அடிப்படைக் கற்கைநெறி இம்மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. புகைப்படக் கலையை தொழில்துறையாக செய்ய விரும்புவோர் இதற்கு விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 12 – 02 – 1924
சிவபதம்: 12 – 05 – 1994

## அமரர் சின்னத்தம்பி பொன்னுச்சாமி

"நினைவால் ஏற்றுவோம் என்றும் நின்பதமலர்"

நாளை (10-6-94) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

இல. 37, 2ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை. (சி-8268)

## பரத நாட்டிய அரங்கேற்றம்



## செல்வி மௌலீஸ்வரி புஷ்பநாதன்

செல்வி மௌலீஸ்வரி புஸ்பநாதனின் (வேம்படி மகளிர் கல்லூரி) நடன அரங்கேற்றம் நாளை (10-06-94) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறும்.

இவர் கலாபவனம் திருமதி சாந்தினி சிவநேசனின் மாணவியும், புஸ்பநாதன் தம்பதிகளின் புதல்வியுமாவார். (31324)

## நன்றி நவிலல்

அற்புத குழந்தை யேசுவே! நீர் எனக்களித்த அரும் பெரும் கொடைகளுக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன்

குழந்தை யேசுவின் அடியாள்
(சி-8425)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில்: 14-11-1939
விண்ணுலகில்: 10-05-1994

## அமரர் கணபதி செல்லத்துரை

திதி: 09 – 06 - 1994

குத்துவிளக்காய் எம் இதயத்தில் கொலுவுற்றிருந்த துணையே,
காலன் நின் ஒளியை அணைத்தாலும்
எம் இதயத்தில் என்றும் ஒளிச்சுடராய் விளங்கும் குலவிளக்கே
தூவுகின்றோம் கண்ணீர்ப் பூக்களை நிந்தன்-நினைவாக
அன்பு என்னும் சொல்லிற்கு அர்த்தம் தந்த தந்தையே
உங்கள் பண்பிற்கும், பாசத்திற்கும் அரவணைப்-பிற்கும்,
நீங்களின்றி இனி யார் எமக்கு
உங்கள் பொன்னான மேனி தீயோடு தீயாக-மறைந்தாலும்,
எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பாசமிகு மனைவி,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (7438)

UNIVERSITY OF JAFFNA

## POST GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Second Semestar Examination for Post-graduate Diploma in Public Administration will commence on 5th July 1994 Candidates could collect their admission cards from SAR/Academic after payment of all dues Students should submit their Field Reports on or before 30 July 94.

REGISTRAR.

(C-8427)

உ
அம்பிகை துணை
வண்வட மேற்கு ஆனைக்கோட்டை
## திருவருள்மிகு ஸ்ரீகண்ணகை அம்பாள் தேவஸ்தானம்
## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்
பவ வருடம் 1994

ஆரம்பம்: 09 – 06 – 1994 வியாழன்

| | | |
|---|---|---|
| சப்பறம் | 21 06–94 | — செவ்வாய் |
| இரதோற்சவம் | 22–06–94 | — புதன் |
| தீர்த்தோற்சவம் | 23–06–94 | — வியாழன் |
| பூங்காவனம் | 24 06 94 | — வெள்ளி |

09–06–94 முதல் 24–06–94 வரை
தினமும் இரவு 7மணி முதல் 8 மணி வரை

தெய்வீகப் பேருரை
### "தேவி மஹாத்மியம்"

நிகழ்த்துபவர்:
தமிழருவி திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர் - காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

மேற்படி காலங்களில் அன்பர்கள், அடியார்கள் யாவரும் வருகை தந்து அம்பாளின் அனுக்கிரகம் பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

திருப்பணிச்சபை,
இந்து இளைஞர் மன்றம்.

[31325]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகளும், முட்டையிடும் கோழிகளும் விற்பனைக்குண்டு. 702, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். (31323)

### தேவை

கோப்பாய் தெற்கு இருபாலையில் உள்ள கண்ணியம் வெதுப்பகத்திற்கு வேலை தெரிந்த ஒழுங்கான பாஸ் ஒருவர் தேவை. நேரில் வந்து சந்தித்து விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்: கண்ணியம் வெதுப்பகம், இருபாலை, கோப்பாய் (31319)

### உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள 15 KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது: தொடர்புகொள்ளவும்: சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம். (சி-8336)

### இலகு திருமண சேவை

35 வயது, சைவம், செவ்வாய் 7, சவுதியில் வேலைபுரிபவர் வீசில் யாழ். உள்ளூர். தகுந்த மணமகள் தேவை. நாடுங்கள் இலகு திருமண சேவையை. த. விமலா, யாழ். நாச்சிமார்கோயிலடி. (31288)

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்துவிட்டது! விற்பனையாகின்றது! ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மிக ஏற்றது. 10 மாதிரிப் பயிற்சிகளையும் 21 நவீன கட்டுரைகளையும் கொண்டது. புதிய கல்வி நிலையத்திலும் யாழ். நகரில் உள்ள புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (31280)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

சாவகச்சேரி பிரதான வீதியில் பெரியரசடிக்கும், சங்கத்தானைக்கும் இடையில் ஒரு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும். ச. விஜயகாந்தன், (தேநீர்க்கடை) உதயன் விற்பனை முகவர், பழைய ஸ்ரேசனடி, மீசாலை. (சி-8424)

### தவறிவிட்டது

Economic Development in the Third world Michael P. Todaro என்னும் பொருளியல் புத்தகம் யாழ். பிறவுண் வீதி கட்டடத் திணைக்களத்திற்கும், இராமநாதன் வீதி பல்கலைக்கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறையில் ஒப்படைக்கவும். (31318)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## விஞ்ஞான பீடம்

கணனி விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்க விரும்பும் 1993/94 கல்வியாண்டிற்குரிய முதலாம் வருட மாணவர்களுக்கு 1994-06-10இல் நடைபெறுவதாக இருந்த உளச்சார்புப் பரீட்சை 1994-06-17ஆம் திகதி 9-00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

[சி-8420]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் (10-06-1994)

வல்வெட்டித்துறை
அமரர் உயர்திரு

## சண்முகம் ஞானமூர்த்தி (J P) அவர்கள்

(முன்னாள் யாழ். மாவட்ட தபால், தந்திச் சேவை மேற்பார்வை அதிகாரியும், முன்னாள் வல்வை மாநகர சபைத் தலைவரும், அந்நாளில் கூறுபட்டுக் கிடந்த தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றாக்கி 'தமிழர் விடுதலைக் கூட்டணி' என்ற அமைப்பை உருவாக்கிய பெருமை வாய்ந்த முக்கியஸ்தர்களில் ஒருவரும்)

உதயம்: 01-10-1905 — சிவபதம்: 11-05-1994

### அஞ்சலிப் பாக்கள்

உண்மையே உருவாகி உள்ளமே கோயிலாகி
வண்மையே பேசி அனைவர்க்கும்-
வழிகாட்டி நின்றாய்
கண்ணியம் மிக்கதலைவருள்-
தலைவனாய்த் திகழ்ந்தாய்
திண்ணிய மனத்துடன் போராடினாய்-
தீயவைகளை அகற்றிட
பண்பிலே சிரமாய் பார்வையிலே எளியனாய்
பலருக்கும் சேவை செய்தாய் வல்வை அறியும்-
வள ஈழமும் அறியும்
என்பிலேயும் தமிழ் உணர்ச்சி பொங்கும் தமிழா
ஈழத் தமிழர் நலமுடன் வாழ ஏங்கி ஏங்கியே
ஒற்றுமை கூட்டினாய்

நாளை (10-06-1994) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்ச்சிகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வல்வெட்டித்துறை. [31305]

---

# இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தி நிலையத்தில் (குளப்பிட்டி) வேலை வாய்ப்புகள்

★ மட்கல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரும், ஆர்வம் உள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
★ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ வயதெல்லை கிடையாது.
★ உற்பத்திக்கான பயிற்சி இந்நிலையத்தில் வழங்கப்படும்.
★ பயிற்சியின்போது ஊக்குவிப்பாக உதவுதொகை வழங்கப்படும்.
★ பயிற்சியின் பின் நிலையத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
★ பயிற்சியின் பின் சுயமாக தொழில் செய்ய விரும்பின் அதற்கான முதலீட்டு உதவிகள் வழங்கப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்:

"சக்திப் பகுதி"

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,

அரசியல்துறை-தமிழீழ விடுதலைப்புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.
தமிழீழம்.

(சி-8403)

---

# 6ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 03-11-1931 — மறைவு: 15-05-1988

## அமரர் தம்பிமுத்து சபாரத்தினம்

(கிராம சேவை அலுவலர்)

திதி: 09-06-1994

அன்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், நல்லவராகவும், குடும்பத்தின் குலவிளக்காகவும், எம்முடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"லக்ஷ்மி மகால்"
சோதி வேம்படி [illegible],
மானிப்பாய்.

---

# கட்சியை பலப்படுத்தவே பதவியைத் துறந்தேன்

## சிறிசேன பிரியாவிடை உரை

கொழும்பு, ஜூன் 9

பதவி விலகிய ஐ. தே. க தேசியப்பட்டியல் எம். பி ஆர். ஏ. டி. சிறிசேன நாடாளுமன்றத்தில் நேற்று பிரியாவிடைப் பேச்சை நிகழ்த்தினார்.

கட்சியைப் பலப்படுத்தவும் தொகுதிகளைத் தொகுதியில் தொடர்ந்து வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ளவுமே தாம் பதவி விலகுவதாக அவர் தனது பேச்சில் தெரிவித்தார். (இ-எ)

---

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை
சித்த ஆயுர்வேத
வைத்தியருக்கான (பதில் கடமை)

## பதவி வெற்றிடம்

வலி. வடக்கு பிரதேச சபையின் மயிலிட்டி உப அலுவலகத்தின் கீழ் இயங்குகின்றதும் தற்பொழுது மல்லாகத்தில் இயங்குகின்ற சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் பதில் வைத்தியராக கடமை புரிவதற்கு 25 வயதுக்கும் - 45 வயதுக்கும் இடைப்பட்ட சித்த ஆயுர்வேத தராதரத்தை உடையவரும், சித்த ஆயுர்வேத வைத்தியராக பணிபுரிவதற்கு பதிவு செய்யப்பட்டவருமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில் சார்ந்த தகைமை, முன்னைய அனுபவம் ஆகிய சுயவிபர தரவுகளை உள்ளடக்கித் தயாரித்த விண்ணப்பங்களை 22-06-1994 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்வித் தகைமை, தொழில் சார்ந்த தகைமை ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். இப்பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

ஏனைய விபரங்களுக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை.

பிரதேச சபைக் காரியாலயம்,
96, யாழ். வீதி,
மல்லாகம், 01-06-1994. (சி/2100)

---

வலி - கிழக்கு பிரதேச சபை

## பதவி வெற்றிடங்கள்

கீழ் காணும் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்வரும் 20-06-1994ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை அவ்வப் பதவிகளுக்குரிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

சகல பதவிகளுக்குமான பொதுவான தகைமைகள்:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பதவிக்கும் உரிய வயதுடையவராகவும், உரிய கல்வித் தகைமை உடையவராகவும், அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
4. சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது

### (அ) ஆயுர் வேத வைத்தியர் - பதில் — 01 பதவி

தேவையான தகைமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றவராகவும் பதிவு செய்யப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
2. 5 வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்
3. வயது 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. சம்பளம் நாளாந்தம் சகல படிகளும் உட்பட ரூபா 147/-

### (ஆ) ஆயுர் வேத மருந்தாளர் - பதில் — 02 பதவி

தேவையான தகைமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்த வைத்தியரின் கீழ் வேலை செய்த 02 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. 18 — 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்
3. க. பொ. த. (சாதாரண தரம்) 06 பாடங்கள் சித்திபெற்றிருக்க வேண்டும்.
4. சம்பளம் நாளாந்தம் சகல படிகளும் உட்பட ரூபா 108/-

### (இ) ஆயுர் வேத மருந்தக தொழிலாளி - பதில் — 02 பதவிகள்

தேவையான தகைமைகள்:

1. 8ஆம் வகுப்பு சித்தி
2. 18 — 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்
3. மருந்து தயாரிப்பதில் அனுபவம் பெற்ற சான்றிதழ்
4. சம்பளம் - நாளாந்தம் சகல படிகளும் உட்பட ரூபா 104/-

கதிரவேலு கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்,
வலி - கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி-கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி;
1994-06-09 [சி-8426]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
*361/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## புதுவிதமாக சிந்தித்தால் என்ன?

தமிழகத்தில் முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவிகளை நல்கி வந்த தொண்டர் நிறுவனங்களை அவ்வாறு உதவக்கூடாது என்று தமிழக அரசு தடை விதித்திருக்கிறது.

முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு வழங்கும் உதவிகளை தமிழக அரசாங்கம் மிகப் பெரிய அளவில் ஏற்கனவே குறைத்து விட்டது. ஏனைய வசதிகள் பலவற்றையும் நீக்கியுள்ளது.

நாடு திரும்பும் ஈழத்தமிழ் அகதிகள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வாழக்கூடிய வாய்ப்போ, வசதியோ, உயிர்ப்பாதுகாப்போ இல்லை என்பதனால் அவர்களைத் திருப்பி அனுப்பும் முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் இந்திய மத்திய அரசையும், தமிழக அரசையும் கேட்டிருந்தது.

அதற்குச் செவிசாய்க்காமல் அந்தக் கோரிக்கை குறித்துப் பதில் தெரிவிக்காமல், ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்ற முடிவை நடைமுறைப்படுத்துவதில் தமிழக அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. ஐ. நா. உடன்பாட்டுக்கு மாறாக, அகதிகளைக் கட்டாயப்படுத்தியும், மறைமுகமாகத் தொந்தரவுகள் கொடுத்தும், அழுத்தங்கள் கொடுத்தும் திருப்பி அனுப்புகிறது.

அகதிகளுக்குத் தான் வழங்கும் உதவிகளைக் குறைத்துக் கொண்ட பின்னர், தொண்டர் நிறுவனங்களை உதவுவதற்கு அனுமதித்தால் அது தனது நோக்கத்தை நிறைவேற்றக் குந்தகமாக அமையும் என்று தமிழக அரசு கருதுவது இயல்பானதே.

அகதிகளைத் திருப்பி அனுப்பும் முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு ஐ. நா. விடுத்த கோரிக்கையை ஏற்பதற்குத் தாம் தயாரில்லை என்பதனை தொண்டர் நிறுவன உதவிகளுக்குத் தடை விதிப்பதன் மூலம் தமிழக அரசு சமிக்ஞை காட்டுகிறது.

இந்தச் சமிக்ஞையைக் கண்டு கொண்டது போல, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இலங்கை அகதிகளுக்கு உதவுவதற்கு ஒரு கோடி 30 லட்சம் டொலர்களை (சுமார் 65 கோடி ரூபாவை) தந்து உதவுமாறு உலக நாடுகளைக் கேட்டிருக்கிறது தமிழ் நாட்டில் இருந்து திரும்பும் அகதிகளைப் பராமரிப்பதற்கான தொகையும் இந்த 65 கோடி ரூபாவில் அடங்கும்.

அகதிகளைப் பராமரிக்க உலக நாடுகளிடம் நிதி உதவி கேட்கும் ஐ. நா., அகதிகளை உருவாக்கும் யுத்தத்தை நிறுத்தவும், யுத்தத்துக்கு மூலகாரணமான இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் உதவுமாறும் உலக நாடுகளைக் கேட்க வேண்டும். ஸ்ரீலங்கா அரசு மீது அதற்குரிய அழுத்தத்தைப் போடுமாறும் கேட்க வேண்டும்.

ஈழ அகதிகளைப் பராமரிக்க 65 கோடி ரூபாவைத் தந்து உதவுமாறு கேட்கும் ஐ. நா. தூதரகம், ஸ்ரீலங்கா அரசு வருடாந்தம் 2,500 கோடி ரூபாவுக்கும் அதிகமாக யுத்தத்துக்குச் செலவிடுவதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

வெளிநாடுகள் பல்வேறு வகைகளால் வழங்கும் நிதி உதவிகளே இராணுவச் செலவாக மாறுகின்றன என்பதனையும் கருத்தில் கொள்வது அவசியம்.

இவற்றை, அனைத்துலக நாடுகளுக்கும் உணர்த்தி, யுத்தத்தை நிறுத்தவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் ஸ்ரீலங்கா அரசைத் தூண்டுமாறு கேட்க வேண்டும் ஸ்ரீலங்கா அதற்கு செவிசாய்க்காவிடில் அதற்கு வழங்கும் நிதி உதவிகளை நிறுத்துமாறு வற்புறுத்த வேண்டும்.

ஸ்ரீலங்காவுக்கு வழங்கும் உதவிகளை வெளிநாடுகள் நிறுத்திவிட்டால் அகதிகள் விவகாரமும் இல்லாமற்போய் விடும் அல்லவா? ஐ. நா. அதிகாரிகள் புதுவிதமாக சிந்தித்தால் என்ன?

இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள்

# கட்டாய நாடுகடத்தலைத் தடுக்க கிளின்ரன் தலையிட வேண்டும்

## அமெரிக்க-கனேடிய தமிழ் அமைப்புகள் மகஜர்

கொழும்பு, ஜூன் 9

இந்தியாவில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டாயமாக நாடு கடத்தப்படுவதைத் தடுக்க அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் உடனடியாகத் தலையிட்டு தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும்—

கனடாவில் உள்ள கனேடியத் தமிழர் கூட்டமைப்பும் — கூட்டாக ஜனாதிபதி பில் கிளிடனுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரில் இடம்பெற்றுள்ள மற்றும் சில கோரிக்கைகள் வருமாறு:

★ இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் இருந்த போது அங்கு தமிழ் மக்கள் மீது புரிந்த யுத்தக் குற்றங்களை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்குமாறு இந்தியாவை ஜனாதிபதி கிளின்ரன் வற்புறுத்த வேண்டும்.

★ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்ட தடைச் சட்டத்தை இந்திய அரசு விலக்கிக் கொள்ளுமாறும் இந்திய அரசாங்கத்தை அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்த வேண்டும்.

★ சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இந்தியத் தலையீடு இல்லாத சர்வதேச சமரச முயற்சியை அமெரிக்க ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும். அதனை இந்தியாவும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

★ இந்திய அரசு இலங்கைப் படையினருக்கும், ஏனைய கூலிப் படைகளுக்கும் பயிற்சி வழங்குவதை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். (இ-எ)

## பிரார்த்தனை நேரம் சோர்ந்து விழும் மாணவர்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வலிகாமம் மேற்கில் உள்ள ஓர் பாடசாலை வகுப்பில் உள்ள 85 மாணவர்களில் 25 மாணவர்கள் காலையில் உணவு அருந்துவதி'லை.

இவர்களில் 15மாணவர்கள் தாய் தந்தையர் இருவரையும் இழந்தவர்கள்.

சங்கானை போஷாக்குவார ஆரம்பவைபவத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. கா. சந்திரபாலன் இதனைத் தெரிவித்தார்.

தினமும் பாடசாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் சில மாணவர்கள் சோர்ந்து விழுகின்றார்கள்; வேறு சில மாணவர்கள் வயிற்றுவலியால் வீடு சென்று விடுகிறார்கள். இவையெல்லாம் போஷாக்கின்மையின் வெளிப்பாடு என்றும் அவர் கூறினார். (க)

# யாழ். அரசினர் வைத்தியசாலைகளில் டாக்டர் பற்றாக்குறை நீடிக்கும் ஆபத்து!

## பட்டம் பெற்று வெளியேறுவோர் இங்கு கடமையாற்ற பின்னடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறும் டாக்டர்கள் அங்கு பணிபுரிய முன்வரும் வரை, யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை நீடிக்கத்தான் செய்யும்.

பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ரெஜி பெரேரா இப்படித் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச மருத்துவ மனைகளில் கடந்த ஐந்தாண்டுகளாக நீடித்துவரும் டாக்டர் பற்றாக்குறை பற்றி தம்மைச் சந்தித்து முறையிட்ட வட பிராந்திய பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். வியோகானந்தன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிவபாதம் ஆகியோரிடம் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறும் டாக்டர்கள் அங்குள்ள மருத்துவ மனைகளில் பணி புரிய விருப்பம் தெரிவிப்பின், அதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் டாக்டர் றெஜி பெரேரா மேலும் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். மாவட்ட அரசினர் மருத்துவமனை ஒன்றில் சேவை புரியும்படி கட்டாய நியமனம் வழங்கப்பட்ட ஒரு டாக்டர் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சம்பவத்தையும் டாக்டர் றெஜி பெரேரா அப்போது நினைவூட்டினார். (இ- எ- 182-17)

## அமைச்சர் பதவி ஹேமாவுக்கு இல்லை

கொழும்பு, ஜூன் 9

ஹேமா பிரேமதாஸா அமைச்சராக்கப்படமாட்டார் என்பது உறுதியாகி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா, பிரேமதாஸா குடும்பத்தினரைச் சந்தித்துப் பேசியதை அடுத்து இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாய்களுக்கு நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

இன்று வியாழக்கிழமை தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:

★ காலை 8மணி தொடக்கம் 10 மணிவரை- குருசோக்வீதி திறின்பீல்ட் சனசமூக நிலையம், ஈச்சமோட்டை சனசமூக நிலையம்—

★ காலை 10 - 30 மணி தொடக்கம் பிற்பகல் 12 - 30 மணி வரை- கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம், பாஷையூர் மாப்பேற்று நிலையம்—

★ பிற்பகல் 1மணி தொடக்கம் மாலை4மணிவரை- தண்டிஎழிலூர் சனசமூக நிலையம், பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயம். (இ-17)

## மா விலை குறைக்க அரசு ஆலோசனை

தேர்தல் கால நிவாரணங்களில் ஒன்றாக மாவின் விலையைக் குறைப்பது பற்றி அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவிலை குறைக்கப் படின், அது வாழ்க்கைச் செலவை தானாக குறைத்து விடும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை மா விலை குறைப்பு நெல் உற்பத்தியாளர்களைப் பாதிக்கும் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## தேர்தல் கால நிவாரணம் குறித்து உதவி வழங்கும் நாடுகள் கவலை

கொழும்பு, ஜூன் 9

கடந்த மேதினமன்று அறிவித்ததைவிட மேலும் தேர்தல் கால நிவாரணங்களை அரசாங்கம் அறிவிக்கவிருப்பது, இலங்கைக்கு உதவிவரும் நாடுகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிவாரணத் திட்டங்களை அமுல்நடத்துவதற்குத் தேவையான பெருந்தொகைப் பணத்தைத் திரட்டுவதற்காக அரசாங்கம் டெலிகொம் மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகிய நிறுவனங்களிடம் உள்ள பணத்தை பெறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது இந்நாடுகளின் கவலையை மேலும் அதிகரித்துள்ளது.

தமது நாடுகளின் நிதிஉதவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் 100க்கு அதிகமான திட்டங்கள் இத்தேர்தல்கால செலவீனங்களால் பாதிக்கப்படக்கூடாது என்று உதவும் நாடுகளின் தூதர்கள் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் வற்புறுத்தினர்.

இம்மாநாட்டுக்கு திட்டமிடல் அமைச்சுச் செயலாளர் டாக்டர் விக்ரம வீரசூரியா தலைமை வகித்தார். (இ-எ)

# பணவீக்கத்தை ஏற்படுத்தாத தேர்தல் நிவாரண திட்டங்கள்

## தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 9

பணவீக்கத்தை ஏற்படுத்தாத தேர்தல் கால நிவாரணத்திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தமது உயர்நிலை ஆலோசகர்களைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அமுல் செய்யப்பட்டுவரும் நிவாரணத் திட்டங்களினால் பணவீக்கம் ஏற்படும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில் —

புதிய நிவாரணத் திட்டங்களை அறிவிக்க அரசு தயாராகி வருகிறது.

இதனால் கலக்கமடைந்த பொருளாதார நிபுணர்கள் —

மேலும் நிவாரணத் திட்டங்களை அறிவிப்பது எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என அரசை எச்சரித்துள்ளனர்.

எப்படி என்றால், தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் தினமன்று பொருள்களின் விலையை இப் பணவீக்கம் பலமடங்கு அதிகரித்து விடும் என்றும் —

அது அரசின் வெற்றி வாய்ப்பை பாதித்து விடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்தே — வாக்காளர்களைக் கவரக் கூடிய, அதே நேரத்தில் பணவீக்கத்தை ஏற்படுத்தாத நிவாரணத்திட்டங்களைத் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு தமது ஆலோசகர்களை ஜனாதிபதி கேட்டுள்ளார் என்று சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (இ எ)

## தகப்பனாரும் பிள்ளைகளும் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்டிருக்கும் தாயாரைச் சென்று பார்த்துவிட்டு வீடு திரும்பிய பிள்ளைகளும், தகப்பனாரும் வீதி விபத்துக்குள்ளாகி காயமடைந்து அதே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரே சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் சாவகச்சேரிராம்புவில் என்ற இடத்தில் வானுடன் மோதுண்டே இவர்கள் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் சரசாலையைச் சேர்ந்த கைலாயபிள்ளை சண்முகதாஸ் (வயது 47) அவரின் புதல்வர்களான செந்தூரன் (வயது 18), ஆரூரன் (வயது13) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (இ-15)

## எனக்குப் பின்னர் ரணிலே ஜனாதிபதி

### விஜேதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய தேசியக் கட்சியில் எனக்குப் பின்னர் தற்போது பிரதமராக உள்ள ரணில் விக்கிரமசிங்காவே ஜனாதிபதியாக வருவார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 30 ஆம் திகதி அனுராதபுரத்தில் நடந்த மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் உறுப்பினர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் ஜனாதிபதி இவ்வாறு அறிவித்தார்.

ஜெயவர்த்தனாவுக்குப் பின்னர் பிரேமதாஸா வந்தது போன்று—

பிரேமதாஸாவுக்குப் பின்னர் தாம் வந்தது போன்று—

தமக்குப் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே ஜனாதிபதியாக வருவார் என்றும் அவர் கூறினார்.

முன்னர் பேசிய முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சோமச்சந்திர ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக்கட்சியில் உள்ள ஒரு லட்சத்து 33 ஆயிரம் உறுப்பினர்களின் விருப்பம், விஜதுங்காவின் பின்னர் ரணில் விக்கிரமசிங்காவே ஜனாதிபதியாக வரவேண்டும் என்பது தான் என்று கூறினார். (இ-எ)

## நல்லூர் பிரதேச செயலக போசாக்கு வார நிகழ்வுகள்

நல்லூர் பிரதேச போசாக்கு வார நிகழ்ச்சிகள் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

காக்குவில், கோண்டாவில், அரியாலைப் பகுதியிலுள்ள 14 சனசமூக நிலையங்களில் போசாக்குப் பற்றிய கலந்துரையாடலும், இலைக்கஞ்சி சத்துணவைத் தயாரித்தலும் தொடர்பான செய்முறைகளும் இரண்டுநாட்கள் நடைபெறும். நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான போசாக்கு பற்றிய கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் சமுதாய மருத்துவத்துறையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது தெரிவு செய்யப்பட்ட சில கிராம அலுவலர் பிரிவுகளில் சுகாதாரமும் போசாக்கும் பற்றிய வீடியோ திரைப்படக் காட்சியும், போசாக்கு தொடர்பான கண்காட்சியும் நடத்தப்பட உள்ளது.

மேலும் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட போசாக்கு பற்றிய பிரசுரமொன்று நல்லூர் பிரதேச சபையின் அனுசரணையுடன் நல்லூர் செயலகத்தால் வெளியிடப்படவுள்ளது.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடமராட்சி கிழக்கு வட்டத்துக்கு உட்பட்ட அனைத்து கடல் தொழிலாளர் சங்க நிர்வாகத்தினர் ச.ச நிலைய நிர்வாகத்தினர், விளையாட்டுக் கழகங்கள், கிராம முன்னேற்ற சங்கத்தினர், மாதர் சங்கம் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை 10 ஆம் திகதி பி.ப. 3-00 மணிக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க)

உடன்படிக்கையில் கையெழுத்திட தவறிய சர்ச்சை:

# விசேட தூதரை ஜனாதிபதி பெல்ஜியம் அனுப்புகிறார்

கொழும்பு, ஜூன் 9

ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்புடன் அபிவிருத்தி உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட இலங்கை வெளியுறவு அமைச்சர் செல்லத் தவறியதால் அந்த அமைப்புடன் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சுமுக தீர்வு காணுவதற்கு விசேட தூதர் ஒருவரை பெல்ஜியத்துக்கு அனுப்ப ஜனாதிபதி விஜேதுங்க முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

விசேட தூதர் ஒருவரை அனுப்புவதற்காக திகதி ஒன்றை நிர்ணயிக்கும்படி கோரி ஜனாதிபதி ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் தலைவருக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு இது தொடர்பாக அவரது ஆலோசகர் வழங்கிய ஆலோசனையை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான விஷயங்களைக் கவனிப்பதற்காக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் லண்டன் சென்றுள்ளார்.

கைவிடப்பட்ட உடன்பாட்டுக்குப் பதில் புதிய உடன்பாடு ஒன்றைத் தயாரிப்பதற்காக இவ்வாண்டிறுதி இலங்கை– ஐரோப்பிய பொருளாதார அமைப்பு ஆணைக்குழு கூடமுடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாக ஐரோப்பிய அமைப்பு கொழும்பு அரசுக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டது. (இ-எ)

## அப்பள பைக்கெட்டுகள் பறிமுதல்

தென்மராட்சி, ஜூன் 9

சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் என கருதப்படும் பாவனைக்கு உதவாத பெருமளவு அப்பள பக்கெட்டுகள் கொடிகாமம் நகரப்பகுதி கடைகளில் இருந்து கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகரால் கைப்பற்றப்பட்டன.

அப்பளப் பைக்கெட்டுகளில் தயாரித்த திகதி, முடிவு திகதி குறிப்பிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

உற்பத்தி, முடிவுதிகதி குறிப்பிடப்படாத சகல உணவுப் பொருள்களும் சுகாதாரப் பகுதியினரால் பறிமுதல் செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# எனக்காக குரல் கொடுக்க இன்று எவருமே இல்லை

## சிறிசேன கூரே கவலை

கொழும்பு, ஜூன் 9

கிரிமினல் நடவடிக்கைகளுடன் என்னை இணைத்து தேசியப் பத்திரிகைகளும் டெலிவிஷனும் அவதூறாகப் பிரசாரம் செய்கின்றன. எனக்காக இன்று அதிகாரத்தில் இருக்கும் எனது சகாக்கள் குரல் கொடுக்கவில்லையே.

அமைச்சர் சிறிசேன கூரே சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு கவலை வெளியிட்டார்.

சொத்து உடைவியுடன் என்னை இணைத்துப் பேசுகின்றார்கள். என்னை நானே இன்று பாதுகாத்துக்கொள்ளும் தனிமைப் போராட்டத்தை நடத்தி வருகின்றேன்.

16 வயதில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து, கஷ்டமான நேரங்களில் எல்லாம் கட்சியைக் காப்பாற்றிய என்னை இப்படிக் கைவிட்டுவிட்டார்கள். (இ-எ)

## சோதித் திருமுகம் காணாது ஏங்குவதோ!

கண்ணும் கருத்தும் நிறைந்து உன்கமல மலர்ப்-
பாதம்,
எண்ணும் படிக்கில் இருந்தனம் நாகம்மையே!-
உன்கோயில்
நண்ணும் சுதிக்குப் பவனிவல; உன்சோதித்-
திருமுகம்
இன்னும் எத்தனைநாள் காணா தேங்குவதோ
தாயவளே!

நயினைக் கவிஞர்
நாக. சண்முகநாதபிள்ளை,

## பெண்ணை விரும்பி வராது விட்டவன் பொன்னை விரும்பி வருவது கேவலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கவில் உள்ள இரத்தக்கறை: காமினியின் பேச்சுக் குறித்து கட்சி உயர்மட்டத்தில் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் இரத்தக்கறைகளை தாம் அகற்றப் போவதாக ஐ.தே.க தேசியப்பட்டியல் எம்.பி காமினி திஸநாயக்கா கூறியிருப்பது கட்சியின் உயர் நிலை வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

அனுராதபுரம் மாவட்ட ஐ.தே.க மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையிலேயே பல உறுப்பினர்கள் இக்கருத்து குறித்து வெளிப்படையாக அதிருப்தி வெளியிட்டனர்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோமச் சந்திரா ராஜபக்ஷ பேசுகையில் காமினி திஸநாயக்கா இப்படிப் பேசுவதற்கு யார் அதிகாரம் கொடுத்தது? என்று கேட்டார்.

கட்சியில் ஏற்பட்ட இரத்தக் கறைக்கு 1977இல் இருந்து பதவி வகித்து வரும் ஐ.தே.க அரசுகள் பொறுப்பா என்றும் அவர் கேட்டார்.

அமைச்சர் சிறிசேன கூரே மீது நடத்தப்பட்டு வரும் அவதூறு பிரசாரத்தை கட்சியில் உள்ள முக்கிய தலைவர்கள் எவரும் கண்டிக்காதது குறித்தும் அவர் கவலை வெளியிட்டார். (இ-எ)

## றொனி- காமினி மீண்டும் நண்பர்கள்

### ஜே.ஆர் இணைத்து வைத்தார்

கொழும்பு, ஜூன் 9

முன்னாள் அமைச்சர்கள் றொனிடிமெல்லும் காமினி திஸநாயக்காவும் மீண்டும் நண்பர்களாகி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெயவர்த்தனா தலைமையிலான அமைச்சரவையில் றொனியும் காமினியும் இருதுருவங்களாகச் செயல்பட்டு வந்தவர் என்றும்--

அந்த விரோதப் போக்கு அண்மைக்காலம் வரை நீடித்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விஜேதுங்கா அமைச்சரவையிலும் அந்த நிலை நீடிக்கப்படக் கூடாது என்று கருதிய முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, இருவரையும் சமாதானம் செய்து வைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் தமது வீட்டுக்கு காமினியையும் றொனியையும் அழைத்து விருந்துபசாரம் ஒன்றை ஜெயவர்த்தனா அளித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் இருவரும் அமைச்சர் நியமனம் பெறவிருப்பது தெரிந்ததே. (இ-எ)

## பருத்தித்துறை நகரில் அடிக்கடி இரவுக் கொள்ளை

பருத்தித்துறை நகரப் பகுதியில் இப்போது அடிக்கடி கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்படுகின்றன.

பூட்டப்பட்டிருக்கும் கடைகள் இரவு வேளைகளில் உடைத்துத் திருடப்படுகின்றன.

ஒருவார காலத்திற்கு முன்னர் புடைவை நிலையம், பாதணி நிலையம் என்பன இரவு வேளையில் கொள்ளையிடப்பட்டன.

மீண்டும் நேற்று முன்தினம் செவ்வாய் இரவும் நகரில் உள்ள மூன்று வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டுக் கொள்ளை நடைபெற்றுள்ளது. தேநீர்க் கடை, அழகு சாதனப் பொருள் விற்பனை நிலையம், பத்திரிகை விற்பனை நிலையம் என்பனவே கொள்ளையிடப்பட்டன. (அ-17-3)


## கேள்வி கோரல் அறிவித்தல்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சிக்கன கடன் வழங்கு சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் சிற்றுண்டிச்சாலையினை 01-08-1994 இல் இருந்து ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு விட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவத்தை மேற்படி சங்க பொருளாளர்/ செயலாளரிடமிருந்து ரூபா 100/- செலுத்தி 23-06-1994 வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 25-06-1994 அன்று 11-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நன்றி.

டாக்டர். சி. கதிரவேல்பிள்ளை.
தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியும்.
(சி-8414)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவானந்தன் கௌரியம்மா

ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சிவானந்தன் கௌரியம்மா நேற்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவானந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயிலானந்தனின் (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும், புவனேஸ்வரியின் மாமியாரும், ஜனஜா, துஷ்சியா, பிரேமஜா, நகுலானந்தன், கிருபானந்தன், கோவர்த்தனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று மாலை 4.00 மணியளவில் 24/1, சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்:-
ஈஸ்வரி
(சகோதரி)

(81331)

### சிவகுருநாதன் பாலேந்திரன் (பாலன்)

(உயரப்புலம் ஆனைக்கோட்டை)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவகுருநாதன் - பாலேந்திரன் (பாலன்) 8-6-94 காலமானார்.

இவர் காலஞ்சென்ற கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் துரையப்பா சிவகுருநாதன் திருமதி. புஸ்பவதி சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு மகனும், ஹரீந்திரன் (யாழ். ப. நோ. கூ. ச.), ரவீந்திரன் (சவூதி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவராணி, நித்தியானந்தி ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (9-6-94) வியாழன் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சி. ஹரீந்திரன்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(81321)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## வலய நிலை கலைத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளுக்கான, தமிழ் மொழி கலைத்திறன் வலய நிலைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் நடைபெற உள்ளன.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவிருக்கும் வலய நிலையப்போட்டிகளில், நாடகங்கள், குறட்பா அறிவு, விவாதம் ஆகியவற்றில் முன்னர் முதலிடம் பெற்றவர்கள் பங்கு கொள்ளத் தகுதியுள்ளவர்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு நாட்களும் வெவ்வேறு பிரிவுகளுக்கும் உரிய போட்டிகள் நடைபெற உள்ளன. (அ)

## சொத்தி உபாலியின் சட்டத்தரணி பாதுகாப்பு தரக் கோருகிறார்

கொழும்பு, ஜூன் 9

நீதிமன்றத்தில் பரபல "பாதாள உலக"த் தலைவர் சொத்தி உபாலிக்காகத் தெரிபடும் சட்டத்தரணி தர்மபால சேனரத்ன தமக்குப் பாதுகாப்பு வழங்க உத்தரவிடும்படி உயர் நீதிமன்றத்தைக் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு "பாதாள உலக" பிரமுகரான சிந்தகா நளின் பெரேரா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதிகளில் ஒருவராக சொத்தி உபாலி காட்டப்பட்டுள்ளார்.

அந்த வழக்கில் சொத்தி உபாலிக்காக சட்டத்தரணி சேனரத்ன தெரிபடுகிறார்.

அவர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள எழுத்து மூலமான விண்ணப்பத்தில்—

"மனுதாரரான சிந்தக நளின் பெரேராவின் தாயார் நீதிமன்றத்தில் தன்னைச் சந்தித்து, சொத்தி உபாலிக்காக தெரிபடவேண்டாம் என்று தன்னைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் தொலைபேசி மூலம் சொத்தி உபாலிக்காக ஆஜரானால் அதன் பின்விளைவுகளை எதிர்நோக்கத் தயாராக இருக்கும்படி தமக்கு எச்சரிக்கை விடப்பட்டதாகவும் அவர் தமது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

### போசாக்கு கருத்தரங்கு

அராலி, ஜூன் 9

வலி மேற்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்து நடத்தி வரும் போசாக்கு வார கருத்தரங்கு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையில் கருத்தரங்கும் இலைக்கஞ்சி அறிமுகமும் நடைபெறும். (ஒ-12)

### ரஷ்யா செல்கிறார் பிரதமர் ராவ்

புதுடில்லி, ஜூன் 9

சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ரஷ்யாவுக்கு முதல் தடவையாக இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இம்மாதம் 29ஆம்திகதி செல்லவிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது திரு. நரசிம்மராவ் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சினுடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### டி.பியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தே.க. வேட்பாளராக காமினி போட்டியிட்டால் தனது பூரண ஆதரவை அவருக்கு வழங்கவும் —

டி.பி.விஜேதுங்கா போட்டியிட்டால் அவரை முழுதுமாக எதிர்ப்பதுடன் வேறொரு போட்டி வேட்பாளரை நிறுத்தவும் தொண்டமான் தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இதேவேளை காமினியை ஜனாதிபதியாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு பிரதியுபகாரமாக தொண்டமான் முன்வைத்துள்ள பல யோசனைகளையும் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 'ஹிரு' மேலும் குறிப்பிட்டுள்ளது. [உ-9]

### சு. கவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தர்களையும் கேட்டுக்கொள்கிறோம். — என்று கூறப்பட்டுள்ளது.

*சிறிமாவோ பேட்டி*

இதேவேளை —

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 'லங்கா தீப' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார்.

அவர் தமது பேட்டியில் இது குறித்துத் தெரிவித்ததாவது:-

தற்பொழுது நாட்டில் சமாதானம் கிடையாது. அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர மக்களின் பிரச்சினைகளை கவனிப்பதே கிடையாது. யுத்தத்தை நீடித்துக் கொண்டு அதனால் ஆயுத வியாபாரம் செய்து ஏராளமான கமிஷன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் சிலர்.

உண்மையான வித்தியில் இனங்களுக்கிடையிலான தேவைகளின் அடிப்படையில் செயலாற்றும் அரசியலே இன்று நாட்டுக்குத்தேவை.

வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக தற்போது சகல சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனும் நாம் பேச்சு நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சுக்களின் பின் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை தயாரிப்போம். அதனை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுவோம் — என்றார். (அ-9)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்

(ALIAS பரமசிவம்)

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

வட்டு. கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் நேற்றிரவு காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கந்தசாமி [பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - கொழும்பு], தெய்வநாயகி, சச்சிதானந்தம், சரவணபவன் [இலங்கை வங்கி -யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தந்தையும்—

ராஜரட்ணம் (வைத்திய அதிகாரி—ஓமந்தை), ராணியமனர், காலஞ்சென்ற செல்வராணி, சமனாதேவி, ஆகியோரின் மாமனாரும் முகுந்தன், ரமணன், கோபிகா, பாலவாசன், கார்த்திகா, ஆரூரன், நித்தியராணி, கோகுலன், கஜன்யா, திருப்பரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு சங்கரத்தை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சரவணபவன்

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.

# வெளிநாடுகளில் அல்லற்பட்டு அலைந்து திரியும் இலங்கையர்

### ரயில் நிலைய மேடைகளில் படுத்து உறக்கம்

கொழும்பு, ஜூன் 9

★ இலங்கையிலிருந்து தொழில் தேடிச் சென்ற சுமார் மூவாயிரம் பேர் வரை ரஷ்யாவிலும் உக்ரைனிலும் அநாதைகளாக — ஆதரவற்ற நிலையில் — பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் அலைந்துபடுகின்றனர்.

★ அவர்களில் 400 பேர் வரை ரஷ்யா, உக்ரைன், போலந்து போன்ற நாடுகளில் விசா இல்லாமல் நாட்டுக்குள் வசித்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

★ மற்றும் ஒரு தொகுதியினர் செக்கோஸ்லோவாகியா, ருமேனியா ஆகிய நாடுகளில் அலைந்துபடுகிறனர்.

சிங்கள வார இதழான 'திவயின' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிய போலி முகவர்களிடம் சுமார் இரண்டு லட்சம் ரூபா வரையிலான பணத்தை கொடுத்து அவர்களினால் ஏமாற்றப்பட்ட இத்தகைய பலர் மேற்படி நாடுகளில் சிறிய அறைகளில் ஒன்றாக அடைந்து கிடந்து உணவின்றி கஷ்டப்படுவதாகவும்—

மற்றொரு பகுதியினர் ரயில் நிலைய மேடைகளில் கூடப் படுத்துறங்குவதாகவும் —

இவர்களை ஏமாற்றிய போலி முகவர்கள் உக்ரைன் போன்ற நாடுகளில் கார் வசதிகளுடன் ஆடம்பரமாக வசிப்பதாகவும் —

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### ஜே. வி. பி முக்கிய உறுப்பினர் கைதானார்

கொழும்பு, ஜூன் 9

ஜே.வி.பி இயக்கத்தைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர் ஒருவர் மூன்று ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டார் என்று தம்புள்ளைப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ-6)

## சுசரித்த இயக்க தலைவராக ஹேமா!

### கணவர் வகித்த பதவி துணைவிக்கு

கொழும்பு, ஜூன் 9

சுசரித்த இயக்கத்தின் தலைவராக திருமதி ஹேமா பிரேமதாஸா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த இயக்கத்தின் தலைவராக முன்னர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா இருந்தார். அவரின் மறைவைத் தொடர்ந்து அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்ட திரு ஆர்.கே. பியதாஸா பதவி விலகியதை அடுத்து ஹேமா தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா சுசரித்த இயக்கத்தின் மூலமாகத்தான் அரசியலில் பிரவேசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ-6)

### சுவரில் குத்திய ஷெல் சிதறியதில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஷெல் ஒன்றை, சீமெந்துச் சுவரில் குத்திப் பார்த்தபோது அது வெடித்துச் சிதறியதில் இருவர் காயமடைந்தனர்.

தொண்டாவில் வடக்கில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்தவர்களான ஷெல்லைக் குத்திப் பார்த்த ஆறுமுகம் சண்முகராசா (வயது 24) அவரின் அருகில் இருந்த எஸ். சதீஸ்கரன் (வயது 18) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### இங்கு மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கமாட்டாது. யுத்தம் முடிந்து சுமுகநிலை திரும்பிய பின்னரே கூடுதல் நிதியை ஒதுக்குவது குறித்து ஆராய முடியும் என்று எமது தலைமையகம் தீர்மானித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து சுமுக நிலை திரும்பினால், நாம் கூடுதல் நிதியை ஒதுக்கி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் தற்போது மேற்கொள்ளப்படும் பேரழிவு அவசர நிவாரணத் திட்டத்தை நிறுத்திவிடுவோம் — என்று விவரித்தார்.

## இணைந்த பல்கலைக்கழகங்களில் டிப்ளோமா படித்தோருக்கு நிரந்தர ஆசிரிய நியமனம்

கொழும்பு, ஜூன் 9

இணைந்த பல்கலைக்கழகங்களில் இந்த டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு இவ்வருடம் தொடக்கம் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

1994 ஆகஸ்ட் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், விவசாயம், மனையியல் ஆகிய பாடங்களில் டிப்ளோமா பட்டம் பெறும் 650 பேருக்கு உடனடியாக ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த நியமனங்கள் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார். (ஒ-எ)

### ஹெலி வீசிய பிரசுரங்கள்

சுழிபுரம், ஜூன் 9

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சில்லாலை, சித்தன்கேணி பகுதிகளுக்கு மேலாக நேற்றுக் காலை 10.30 மணியளவில் பறந்த ஹெலி ஒன்றில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் அள்ளி அள்ளி வீசப்பட்டன. (ஒ-28)

### நாகர்கோவில் கடற்கரையில் றொக்கட் தாக்கு

தென்மராட்சி, ஜூன் 9

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கொட்டோடை கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று றொக்கட் தாக்குதலை நடத்தியது. அப்பகுதியில் சுமார் எட்டு றொக்கட் குண்டுகள் ஏவப்பட்டன.

குண்டுகள் கடலில் வீழ்ந்து வெடித்ததால் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது (ஒ-117)

## கூரேயின் வீட்டுக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிதைவுகள் கிடந்ததாகவும்

இங்கே முன்னர் பொலீஸ் அதிரடிப்படையின் முகாம் ஒன்று அமைந்திருந்ததாகவும் —

பின்னர் இந்த நிலம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்கப்பட்டதாகவும் —

அந்த நிறுவனத்தினர் வீட்டுத்திட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மலசல கூடக் குழி ஒன்றை அமைப்பதற்காகத் தோண்டியபோது அங்கிருந்து எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனை கண்டுபிடித்த தொழிலாளர் அதுபற்றி தமது உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போது, அவர்கள் அவற்றை மீண்டும் அதே குழியில் போட்டு மூடிவிட்டு, வேறிடத்தில் குழி தோண்டும்படி உத்தரவிட்டதாகவும் "லக்திவ" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருஷம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் (10-06-1994) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-48 மணி முதல் 2-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

எனது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
சிவபாஸ்கரன்
(சிவா)
(உரிமையாளர். அருள் முருகன் நகைமாளிகை யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
ஞானாம்பிகை
(ஞானா)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம்:
பிற்பகல் 5மணி முதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி க. பஞ்சாட்சரம்,
பெருங்குளம் பிள்ளையார்,
கோயில் வீதி,
சாவகச்சேரி.

திரு. திருமதி சு. திருநாவுக்கரசு,
874, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(81322)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org